Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 23 நவம்பர், 2022

## நெஸ்லே லங்கா நிறுவனம் தனது குருநாகல் தொழிற்சாலையில் முதலீடு செய்வதன் மூலமும் நெஸ்லே *நெஸ்டமோல்ற்று* மற்றும் நெஸ்லே *மைலோ*வின் உற்பத்தித் திறனை விரிவுபடுத்துவதன் மூலமும் இலங்கை மீதான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது

நெஸ்லே லங்கா நிறுவனம், புதிய Vacuum Band Dryer ஐ நிர்மாணிப்பதற்காக, குருநாகலில் உள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில் ரூபா 2 பில்லியன் இற்கு மேலான தொகையை முதலீடு செய்து, இலங்கை மீதான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. மோல்ற்று உணவுக்கான அதன் உற்பத்தி ஆலையின் திறனை விரிவுபடுத்தும் நோக்கில், இந்த முதலீடானது, இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் சாதகமான நன்மைகளை ஏற்படுத்தும் நிறுவனத்தின் முயற்சிகளை மேலும் வலுப்படுத்துகிறது.

1984 ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று நெஸ்லே லங்காவின் குருநாகல் தொழிற்சாலையானது நாட்டில் விற்பனை செய்யப்படும் நெஸ்லே தயாரிப்புகளில் 90% க்கும் அதிகமானவற்றை, கடுமையான தரக் கட்டுப்பாடுகளுடன் உற்பத்தி செய்து வருகிறது. 115 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் ஆதரவாக செயற்பட்டு வந்துள்ள, "நல்லுணவு, நல்வாழ்வு" நிறுவனம், இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக மாறியுள்ளதுடன், 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தியாளர்கள் மற்றும் தென்னை செய்கையாளர்கள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து, 800 க்கும் அதிகமானோருக்கு நேரடி வேலைவாய்ப்பையும் வழங்குகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், ரூபா 6.6 பில்லியனுக்கும் மேற்பட்ட தொகையுடன், நிறுவனம் தொடர்ந்து நாட்டில் முதலீடு செய்து வந்துள்ளது.

உள்நாட்டில் உணவு மற்றும் பான வகை தொழில் துறையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படவுள்ள, சுவிட்சலாந்து நாட்டில் வடிவமைக்கப்பட்ட Vacuum Band Dryer ஆனது, நிறுவனம் அதன் மிகவும் விரும்பப்படும் வர்த்தகநாமங்களான நெஸ்லே *நெஸ்டமோல்ற்று* மற்றும் நெஸ்லே *மைலோ* ஆகியவற்றை இரும்புச்சத்து மற்றும் விட்டமின் டி* செழுமை நிறைந்தவையாக வழங்க உதவுகிறது.

2022 நவம்பர் 23 அன்று, புதிய Vacuum Band Dryer ஐக் கொண்டிருக்கவுள்ள கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டி, இந்தத் திட்டத்தின் அங்குரார்ப்பணத்தை நினைவுகூரும் நிகழ்வு நடைபெற்றது. நெஸ்லே லங்காவின் குருநாகல் தொழிற்சாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் கௌரவ வைத்தியர் ரமேஷ் பத்திரன, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்சலாந்து தூதுவரான மேன்மை தங்கிய டொமினிக் ஃபர்க்லர், பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ. அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் பணிப்பாளர் நாயகமான ரேணுகா வீரக்கோன் ஆகியோர் நெஸ்லே லங்காவின் அதிகாரிகளுடன் இணைந்து கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சரான கௌரவ வைத்தியர் ரமேஷ் பத்திரன அவர்கள், "பொருளாதார சுபீட்சமானது முதலீட்டினால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது, இது திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது. எனவே, இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான இந்நிறுவனத்தினால் ரூபா 2 பில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட முதலீட்டை அறிவிக்கும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதை நான் ஒரு கௌரவமாக கருதுகிறேன். தற்போது பொருளாதார வளர்ச்சிக்கு அந்நியச் செலாவணி இன்றியமையாததாக இருப்பதால், இந்த முதலீடு இறுதியில் நிறுவனத்தின் ஏற்றுமதி திறனை அதிகரிக்கும் என்பதையும் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்," என்று குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ. அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள் கருத்து தெரிவிக்கையில், "115 வருடங்களாக நாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு நிறுவனமாக,

நெஸ்லே லங்கா தொடர்ச்சியாக இலங்கையில் தக்க நோக்கத்துடன் முதலீடு செய்து வருகிறது. நாட்டின் திறன் மீது நிறுவனம் வைத்துள்ள நம்பிக்கை உண்மையிலேயே உத்வேகம் அளிக்கிறது. வரவிருக்கும் ஆண்டுகளில் இந்த முதலீடு நமது சமூகங்களுக்கும் பொருளாதாரத்திற்கும் கொண்டு வரும் நேர்மறையான விளைவைக் காண நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்,'' என்று குறிப்பிட்டார்.

''நாம் தற்போது குறுகிய கால மற்றும் நீண்ட கால அளவில் பல பொருளாதார ஏற்ற இறக்கங்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு உதவுவதில் மூலதன முதலீடுகளின் பங்கு மிக முக்கியமானது. எனவே, இலங்கையில் தனது முதலீடுகளை வலுப்படுத்துவதில் நெஸ்லே லங்காவின் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம். இது நாட்டின் சாத்தியக்கூறுகள் பற்றிய நேர்மறையான செய்தியை எதிரொலித்து, மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கிறது," என இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் பணிப்பாளர் நாயகமான ரேணுகா வீரக்கோன் அவர்கள் தெரிவித்தார்.

நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்செனியா அவர்கள் தனது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்கையில், ''இலங்கையில் நம் அனைவருக்கும் இது ஒரு சவாலான காலகட்டம் என்றாலும், நாட்டின் மீள்எழுச்சித்திறன், ஆற்றல் மற்றும் அதன் எதிர்காலத்தை நாங்கள் முழு மனதுடன் நம்புகிறோம். இலங்கைக்கான எங்களின் அர்ப்பணிப்பை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். மேலும், எங்களது உற்பத்தி தொழிற்சாலைகளில் தொடர்ந்து முதலீடு செய்து, இலங்கையில் உள்ள எங்கள் நுகர்வோரின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய சுவிட்சலாந்து நாட்டில் வடிவமைக்கப்பட்ட சிறந்த தொழில்நுட்பத்தை தொடர்ந்து கொண்டு வருவோம். நெஸ்லே லங்கா சார்பாக, இந்த முதலீடு மற்றும் எங்கள் மோல்ற்று உணவு வகையின் விரிவாக்கத்தை அறிவிப்பது எனக்கு மிகவும் பெருமையளிக்கிறது. இந்த முதலீடு நாடு மீதான எமது ஓயாத அர்ப்பணிப்புக்கு சான்று என்பதுடன், 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களுடன் எமது ஆழமான வேர்களை உறுதிப்படுத்துகிறது. நெஸ்லே நெஸ்டமோல்ற்று மற்றும் மைலோ ஆகிய இரண்டு பாரிய வர்த்தகநாமங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் இந்த முதலீட்டின் மூலம் எங்கள் நுகர்வோர் மற்றும் சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்குவோம் என்று நம்புகிறோம். அத்துடன், நாங்கள் தற்போது 50 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு எமது தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்து வரும் நிலையில், இந்த முதலீட்டின் மூலமாக எமது ஏற்றுமதி செயற்பாடுகளை மேலும் பல சந்தைகளுக்கு விஸ்தரிப்பதற்கான வாய்ப்புக்களையும் ஆராய்ந்து வருகிறோம். இவ்வாறு ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமாக இன்னும் கூடுதலான அளவில் அந்நியச் செலாவணியையும் ஈட்டுவதற்கு எங்களால் பங்களிக்க முடியும் என்பதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்,'' என்று குறிப்பிட்டார்.

'உணவின் ஆற்றலின் மூலம் இன்றும், எதிர்காலத் தலைமுறைகளுக்கும், அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்' அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது.

*100 கிராம் நெஸ்டமோல்ற்றில் 17 mg இரும்புச்சத்து மற்றும் 6 mcg விட்டமின் டி ஆகியன அடங்கியுள்ளன.
100 கிராம் மைலோவில் 23.4 mg இரும்புச்சத்து மற்றும் 7.6 μgD விட்டமின் டி ஆகியன அடங்கியுள்ளன.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |